சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

அசல் வழக்கு எண்.4/2022

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ம் நாள் பி.வா.சா.1 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.சபரீசன், பென்கிளார்க், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராமசாமி | வயது | 75 |
| த/பெ | காளப்ப கவுடர் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | சிக்காரம்பாளையம் | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | விவசாயம் |

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1ம் பிரதிவாதி தனது மகனுக்கு எந்த அடிப்படையில் விடுதலை ஆவணம் எழுதிக்குக் கொடுத்தார் என்றால் அவரது பெயரில் இருந்ததால் எழுதிக் கொடுத்தார். 1ம் பிரதிவாதிக்கு எந்த ஆவணத்தின் அடிப்படையிலும் புல எண்.85/1D ல் உரிமை ஏற்பட வில்லை என்றால் சரி அல்ல. என்னுடைய நிரூபண வாக்கு மூலத்தில் சந்திரசேகர் விடுதலை பத்திரம் வாங்கி கொண்ட அன்றே மேற்படி சொத்தை பொறுத்து அவர்களது நண்பர்களான காமராஜ், ராஜேஷ் குமார் மற்றும் மகேந்திர குமார் ஆகியோர்களுக்கு கிரையம் செய்து கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரி தான். அதே தேதியில் காமராஜ், ராஜேஷ் குமார் மற்றும் மகேந்திர குமார் ஆகியோர்கள் சதீஷ் குமார் என்பவருக்கு பொது அதிகார ஆவணம் எழுதி உள்ளதாக நிரூபண வாக்கு மூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றும் சதீஷ் குமார், சந்திரசேகருக்கு என்ன உறவு என்றால் சந்திரசேகர் என்பவரின் பெரியம்மாள் மகன் தான் சதீஷ் குமார். அவர் அந்த பொது அதிகார ஆவணத்தை வைத்து கொண்டு சந்திரசேகர் என்பவருக்கே கிரையம் கொடுத்து விட்டார் என்றால் சரி தான். தாவா சொத்தை பொறுத்து கிரையம், பொது அதிகார

ஆவணம் மற்றும் கிரைய ஆவணங்கள் ஏற்பட்டுள்ளன என்றால் சரி தான். நண்பர்கள் மற்றும் உறவினர்கள் மட்டுமே அந்த ஆவணங்களில் சம்மந்தப்பட்டுள்ளார்கள் என்றும் 3 ம் தரப்பினர்கள் யாரும் சம்மந்தப்படவில்லை என்றால் சரி அல்ல. தாவா சொத்தில் வாதி மற்றும் 4 ம் பிரதிவாதிக்கு மட்டுமே உரிமை உள்ளதால் அதனை மறைத்து ஏதாவது வில்லங்கம் செய்ய வேண்டும் என்பதற்காகவே அந்த ஆவணங்கள் உருவாக்கப்பட்டன என்றால் சரி அல்ல. திருமப்ப கவுடர் மற்றும் கெம்பக்காள் ஆகியோர்கள் உயிருடன் இருந்த காலத்தில் எந்த ஆவணமும் எழுதி வைக்காததால் ஏதாவது ஆவணம் எழுதி வைக்கம் நோக்கத்தில் தான் மேற்கண்ட ஆவணங்கள் உற்பத்தி செய்யப்பட்ட என்றால் சரி அல்ல. அ.வ.எண்.13/2005 வழக்கில் பிறப்பிப்பட்ட தீர்ப்பில் வாய் மொழி பாகப் பிரிவினை செல்லாது என அறிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரி அல்ல. அவரவருக்கு அளந்து கொடுக்க சொல்லி தீர்ப்பானது. இனி மேல் கொண்டு திருமப்பகவுடர், கெம்பக்காள் சொத்துக்களை அவரவர் பாகம் பிரித்து எடுத்து கொள்ள வேண்டும் என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது என்றால் சரி அல்ல. அந்த தீர்ப்பில் திருமப்ப கவுடர் மற்றும் கெம்பக்காளுக்கு காளப்ப கவுடர் என்ற ஒரே மகன் உள்ளதாகத் தான் கூறப்பட்டுள்ளது என்றால் சரி அல்ல. அந்த வழக்கில் திருமப்ப கவுடர் மற்றும் கெம்பக்காளின் முதல் நிலை வாரிசு காளப்ப கவுடர் என்பதாகவும் காளப்ப கவுடரின் முதல் நிலை வாரிசுகள் என்ற அடிப்படையில் நானும் 1 மற்றும் 3 பிரதிவாதிகள் வாரிசுகள் என்றால் சரி தான்.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

ஓம்/-. கா.கெங்காராஜ்,

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.